# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 44/ 2021** **நாள்: 11.10.2021**

**அமைதியான முறையில் வாக்கு எண்ணுகை நடத்துவது குறித்து சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டம் இன்று (11.10.2021) நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் திரு ஜி.வெங்கடராமன், இ.கா.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., கூடுதல் இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் திரு. ஜி.சம்பத், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்), திரு. க. அருண்மணி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் 12.10.2021 அன்று நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வாக்கு எண்ணுகை அமைதியான முறையில் நடைபெறுவது குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

..2..

வாக்கு எண்ணுகை மையங்களுக்கு வாக்கு எண்ணுகை அலுவலர்கள் காலை 6.30 மணிக்கு ஆஜராவதை உறுதி செய்திடவும், வாக்கு எண்ணுகை மையத்திற்குள் உரிய அடையாள அட்டையின்றி எவரும் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி தெரிவிக்கப்பட்டது. வாக்கு எண்ணுகை அலுவலர்கள் அனைவரும் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும் எனவும், அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வைத்திருக்கும் வேட்பாளர்களின் முகவர்கள் மட்டுமே வாக்கு எண்ணுகை மையத்திற்குள் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் வாக்கு எண்ணுகை மேற்பார்வையாளர்களுக்கு வாக்கு எண்ணுகையின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கிட தெரிவிக்கப்பட்டது.

வாக்கு எண்ணுகை மையத்திற்கு வெளியில் 200 மீட்டர் இடைவெளிக்குள் தேவையின்றி கூட்டம் கூடுவதை தடுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து காவல் கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

அஞ்சல் வாக்குகள் எண்ணுகையின் போது இவ்வாணையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைக் கையேடு எண். 7 மற்றும் 8ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி வாக்கு எண்ணுகையினை சிறப்பாக முடித்திட அறிவுரைகள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு தேர்தலுக்கான வாக்கு எண்ணுகை முறையாக முடிவுற்றப்பின்னர் உடனுக்குடன் தேர்தல் முடிவுகளை அறிவித்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் வாக்கு எண்ணுகை மையங்களில் கோவிட் -19 வழிகாட்டி நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உறுதி செய்திட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும் மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- வாக்கு எண்ணுகை மைய அலுவலர்களுக்கு பயிற்சி.
- வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி பதிவு குறித்த ஏற்பாடுகள் செய்தல்.

..3..

- வாக்கு எண்ணுகைக்கு போதுமான மேசைகள் மற்றும் அலுவலர்கள் இருப்பதை உறுதி செய்தல்.
- வாக்கு எண்ணுகை மையத்தில் கோவிட்-19 சமூக இடைவெளியை கடைபிடிக்க அறிவுறுத்துதல்.
- வாக்குச்சீட்டுகள் எண்ணுகை தொடர்பாக அறிவுரைகள்.
- வாக்குச்சீட்டுகள் எண்ணுகை முடிந்தவுடன் தேர்தல் முடிவுகளை அறிவித்தல் குறித்த அறிவுரைகள்.
- வாக்கு எண்ணுகை மையங்களில் தேவையில்லாத கூட்டம் சேர்தலை தடுத்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதை உறுதி செய்தல்.
- வாக்கு எண்ணுகை மையங்களில் உணவு மற்றும் தண்ணீர் ஏற்பாடு செய்தல்.
- வாக்கு எண்ணுகை மையங்களில் முழுமையான மின்சார வசதி மற்றும் மழையை முன்னிட்டு பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்தல்.
- தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிவித்தல்.
- தேர்தல் முடிவுகள் குறித்து உடனடியாக தக்க பதிவுகள் மேற்கொண்டு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல்.
- ஊரக உள்ளாட்சி பதவியிடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முதல் கூட்டம் 20.10.2021 அன்று நடத்தபெறுவது தொடர்பான அறிவுரைகள்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்